DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : திரு.வெங்கட்ராமானுஜம் | Father/Husband Name : நாராயணசாமி |
| Age : 60 | Village : சாத்தூர் |
| Taluk : | Calling : உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13 Mar 2026 16:37

(Accused Present)

**<u>முதல் விசாரணை</u>** :–

1. நான் தற்போது அம்மாபட்டி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. இதற்கு முன்பு 10.01.2015 ம் தேதி சாத்தூர் நகர் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக இருந்தபோது ஆய்வாளர் உத்தரவுபடி தலைமைகாவலர் 1511 முருகன், பெண் தலைமை காவலர் 1661 இந்திராணி ஆகியோர்களுடன் சாத்தூர் அரசு மருத்துவமனை பொறுப்பு மருத்துவ அதிகாரி மருத்துவர் திரு.பழனியப்பா அவர்களுடன் போலி மருத்துவம் பற்றி கண்காணித்து சோதனை செய்து வரும்போது காமராஜபுரத்தில் இரண்டாவது தெருவில் பெண் ஒருவர் போலி மருத்துவம் பார்ப்பதாக கிடைத்த தகவலின் பேரில் 11.00 மணிக்கு காமராஜபுரம் 2 வது தெருவில் அன்வர்அலி என்பவரது வீட்டில் அவரது மனைவி நிஷா என்பவர் பொதுமக்களை ஏமாற்றி மருத்துவர் என்று கூறி மருத்துவம் பார்த்துக்கொண்டிருந்தவரை எங்கள் பார்ட்டி சகிதம் மேற்படி நிஷா என்ற நிலோஃபர் என்பவரை விசாரிக்க அவர் தான் முறையாக அலோபதி மருத்துவம் படிக்கவில்லை என்றும், பொதுமக்களை ஏமாற்றி பணம் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு மருத்துவம் பார்ப்பதாக கூறி அவர் வைத்திருந்த மருத்துவ உபகரணங்கள் மாத்திரை, டானிக் போன்றவைகளை எடுத்து மருத்துவர் பழனியப்பான அவர்களிடம் எங்கள் முன்னிலையில் கொடுத்தார்.

3. மருத்துவர் பழனியப்பா மேற்படி நிஷா ஆஜர்படுத்திய மருந்து மாத்திரைகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் ஆகியவற்றையும், எதிரி நிஷாவை பெண்காவலர்கள் உதவியோடும் சாத்தூர் நகர் காவல்நிலையம் கொண்டு வந்து ஆஜர் செய்து மேற்படி நபர் மீது நடவடிக்கை எடுக்க உதவி ஆய்வாளர் சௌந்திரபாண்டியனிடம் புகார் கொடுக்க நாங்கள் உதவியாக இருந்தோம். வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

4. இந்த வழக்கின் புகார் தாரர் சாத்தூர் அரசு மருத்துவமனையில் பொறுப்பு மருத்துவராக பணியில் இருந்தார் என்றால் சரிதான். சாட்சிகள் இந்திராணி மற்றும் முருகன் ஆகியோர் எனக்கு கீழே பணியாற்றிய காவலர்கள் என்றால் சரிதான். நாங்கள் காவல் நிலையத்தில் இருந்து காலை 09.00 மணிக்கு ரோந்து பணிக்கு சென்று, நகர் பகுதியில் காலை 11.00 மணிக்கு கண்காணிப்பில் இருந்தபோது எங்களுக்கு தகவல் கிடைத்து சம்பவ இடத்திற்கு சென்றோம். எனக்கு வழங்கப்பட்டதாக கூறப்படும் உத்தரவு வாய்மொழி உத்தரவா அல்லது எழுத்து மூலமாக உத்தரவா என்று ஆய்வாளர் என்னை விசாரித்த போது கூறவில்லை என்றால் ஞாபகம் இல்லை. எனக்கு பிறப்பிக்கப்பட்ட உத்தரவு வாய்மொழி உத்தரவா அல்லது எழுத்து மூலமான உத்தரவா என்றால் வாய்மொழி உத்தரவு ஆகும்.

5. எனக்கு பாக்கெட் டைரி எழுதுவது வழக்கம் என்றால் சரிதான். மேற்படி வாய்மொழி உத்தரவு பற்றி என்னுடைய பாக்கெட் டைரியில் எழுதியிருப்பேன் என்றால் சரிதான். அதை நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் காவல் நிலையத்தில் ஒப்படைத்துள்ளேன். என்னுடைய பாக்கெட் டைரியை காவல் நிலையத்தில் ஒப்படைத்து விட்டேன் என்று கூறும் விபரத்தை ஆய்வாளர் என்னை விசாரித்த போது கூறவில்லை என்றால் ஞாபகமில்லை. நான் உண்மையிலேயே பாக்கெட் டைரி எழுதி இருந்தால் அது தொடர்பான விபரத்தை ஆய்வாளர் விசாரணையில் கூறியிருப்பேன் என்றாலும், நான் எழுதவில்லை என்பதால் தான் ஞாபகமில்லை என்று கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. வாய்மொழியாக பிறப்பிக்கப்பட்டதாக கூறும் உத்தரவு எங்கள் காவல் நிலைய பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்குமா என்றால் அன்றைய தேதியில் யார் அந்த பதிவேட்டை பராமரிக்க வேண்டிய பொறுப்பில் இருக்கிறாரோ அவர் பதிவிட்டிருப்பார்.

6. என்னுடன் வந்த காவலர்களுக்கு தனியாக வாய்மொழியாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்பதை ஆய்வாளர் என்னை விசாரித்த போது கூறவில்லை என்றால் அனைவருக்கும் சேர்த்து ஒரு முறை தான் வாய்மொழி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆய்வாளர் எங்களுக்கு வாய்மொழி உத்தரவு பிறப்பித்தபோது நாங்கள் எங்கு இருந்தோம் என்றால் காவல் நிலையத்தில் தான் இருந்தோம். நான் காலை 09.00 மணிக்கு ரோந்து பணிக்கு புறப்பட்டு எங்கு ரோந்து பணி செய்துவிட்டு எத்தனை மணிக்கு காவல் நிலையத்திற்கு வந்தேன் என்ற விபரத்தை ஆய்வாளர் என்னை விசாரித்த போது கூறவில்லை என்றால் கூறியுள்ளேன். ஆய்வாளர் விசாரித்த போது நான் கூறியதாக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், அவ்வாறு எதுவும் கூறவில்லை என்றாலும் சரியல்ல.

7. நான் காலை 09.00 மணிக்கு ரோந்து பணியை ஆரம்பித்து எங்கெல்லாம் சென்றேன் என்றால் சாத்தூர் மெயின் பஜார், வெம்பக்கோட்டை சாலை, படந்தால் சாலை ஆகிய இடங்களுக்கு சென்றேன். ரோந்து பணிக்கு யாரெல்லாம் சென்றோம் என்றால் நான், தலைமை காவலர் முருகன், பெண் காவலர் இந்திராணி மற்றும் மருத்துவர் பழனியப்பா ஆகியோர் காலை 09.00 மணிக்கு போலி மருத்துவர் தொடர்பான ரோந்து பணியை ஆரம்பித்தோம். நாங்கள் எந்த வாகனத்தில் ரோந்து பணிக்கு சென்றோம் என்றால் தனித்தனி இரு சக்கர வாகனத்தில் சென்றோம். மருத்துவர் அவருடைய காரில் வந்தார். ரோந்து பணி முடித்து நாங்கள் எத்தனை மணிக்கு காவல் நிலையத்திற்கு சென்றோம் என்றால் 12.00 மணிக்கு சென்றோம்.

8. மருத்துவர் பழனியப்பாவிற்கு அவருடைய மேல் அதிகாரி உத்தரவு எதுவும் பிறப்பித்தார் என்பதை நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. மருத்துவர் பழனியப்பாவுடன் அவருடைய வாகனத்தில் வேறு யாரெல்லாம் வந்தார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. எதிரியின் வீட்டிற்கு நாங்கள் எந்த இடத்தில் இருந்து புறப்பட்டோம் என்றால் வெம்பக்கோட்டை சாலையிலிருந்து புறப்பட்டோம். வெம்பக்கோட்டை சாலையிலிருந்து நாங்கள் புறப்படும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் 10.50 முதல் 11.00 மணி இருக்கும். எதிரி வீடு இருப்பதாக கூறும் பகுதி குடியிருப்புகள் அதிகமாக இருக்கக்கூடிய பகுதி என்றால் சரிதான். எதிரியின் வீட்டிற்குள் எத்தனை நபர்கள் சென்றோம் என்றால் நான், என்னுடன் வந்த தலைமை காவலர் முருகன், பெண் காவலர் இந்திராணி மற்றும் மருத்துவர் பழனியப்பா ஆகிய நான்கு பேரும் சென்றோம்.

9. அந்த வீட்டின் கதவு எண் என்னவென்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வீடு எந்த திசையை நோக்கி இருக்கிறது என்றால் சரியாக திசையை எனக்கு சரியாக சொல்ல தெரியவில்லை. நான் சாத்தூர் சரதத்தில் எத்தனை ஆண்டுகளாக காவல்துறையில் பணியாற்றுகிறேன் என்றால் 27 ஆண்டுகளாக பணியாற்றுகிறேன். எனக்கு சாத்தூர் பகுதியில் உள்ள அனைத்து பகுதிகளும் நன்கு தெரியும் என்றாலும், திசை சொல்ல தெரியவில்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. நான்

சென்றதாக கூறும் எதிரியின் வீடு எத்தனை அறைகளை கொண்டது என்றால் சரியாக ஞாபகம் இல்லை. நாங்கள் எதிரியின் வீட்டிற்குள் சென்றபோது பொதுமக்கள் அங்கு கூடி விட்டார்கள் என்றால் சரிதான். அவர்களை இந்த வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் அவர்கள் சாட்சியமளிக்க முன்வரவில்லை. அந்த நபர்கள் சாட்சியமளிக்க முன்வரவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

10. எதிரியின் வீட்டிற்குள் சோதனை செய்ய நீதிமன்ற கட்டளை எதுவும் பெற்றோமா என்றால் இல்லை. பொதுவாக ஒரு வீட்டை சோதனை செய்ய நீதிமன்ற கட்டளை அவசியம் என்றால் சரிதான், ஆனால் எதிரி தடையதை அழித்து விடுவார் என்பதாலும், அது பிடிக்கக்கூடிய குற்றம் என்பதாலும் இந்த வழக்கில் நீதிமன்ற கட்டளை (search warrant) பெறப்படவில்லை. குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 100–ல் குறிப்பிடப்பட்டுள்ள நீதிமன்ற கட்டளை தொடர்பான நடைமுறைகள் முறையாக பின்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் வீட்டிற்குள் சென்றபோது எங்களுடன் பெண் மருத்துவர் யாரும் வரவில்லை என்றால் ஞாபகம் இல்லை. எதிரியின் வீட்டிற்குள் சென்றபோது அங்கு மருத்துவம் பார்த்ததற்கான அறிகுறியோ அல்லது உபகரணங்களோ, படுக்கைகளோ இல்லை என்றால் மருத்துவம் பார்த்ததற்கான அறிகுறி இருந்ததால்தான் நாங்கள் சோதனையிட சென்றோம். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்த போது எதிரியின் வீட்டில் மருத்துவம் பார்த்ததற்கான அறிகுறி இருந்ததாகவோ அல்லது உபகரணம் இருந்ததாகவோ குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல, ஊசி, மருந்து இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

11. எதிரி வீட்டில் இருந்ததாக கூறும் ஊசி மற்றும் Stethoscope, இரத்த கொதிப்பு பார்க்கக்கூடிய இயந்திரம் போன்ற பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் கைப்பற்றப்பட்டது. நான் கூறுவது போல் எந்த பொருளும் எதிரியின் வீட்டில் வைத்து கைப்பற்றவில்லை என்றாலும், மருத்துவர் கைப்பற்றியதாக வழக்குக்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. நான் சென்றபோது பொதுமக்கள் யாரும் மருத்துவம் பார்க்கவில்லை என்றால் போலீசாரை பார்த்ததும் ஓடி விட்டார்கள். போலீசாரை பார்த்ததும் சிகிச்சை எடுத்துக் கொண்டிருந்த நபர்கள் ஓடிவிட்டார்கள் என்று கூறுவதை ஆய்வாளர் என்னை விசாரித்த போது நான் கூறவில்லை என்றால் சரிதான். ஓடிய நபர் யார் என்பதை அருகில் இருந்த நபர்களிடம் விசாரிக்கவில்லை என்றால் விசாரித்த போது அவர் யாரென்று தெரியவில்லை என்று கூறிவிட்டார்கள். நான் கூறுவது போல் எதிரி யாருக்கும் மருத்துவம் பார்க்கவில்லை என்றாலும், சிகிச்சை எடுத்துக் கொண்டிருந்த நபர் ஓடிவிட்டதாக கூறுவதும் இந்த வழக்கிற்கான பொய் என்றால் சரியல்ல.

12. எதிரியிடமிருந்து சிகிச்சையளித்ததற்கான பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். என்னென்ன மருந்துகள் கைப்பற்றப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் பாட்டிலில் இருந்த மருந்துகள் பற்றிய விபரம் எனக்கு தெரியாது. மருந்துகள் மற்றும் உபகரணங்கள் கைப்பற்றியது தொடர்பாக அத்தாட்சி எதுவும் தயார் செய்யவில்லை என்றால் சரிதான், பொருட்கள் மற்றும் எதிரியுடன் காவல் நிலையத்திற்கு வந்து புகார் அளித்தோம். உண்மையிலேயே பொருட்களை கைப்பற்றி இருந்தால் அத்தாட்சி தயார் செய்திருப்போம் என்றால் சரியல்ல.

13. எதிரி மருந்துகளை யாரிடமிருந்து வாங்கினார் என்பதை விசாரித்தேனா என்றால் நான் விசாரிக்கவில்லை. எதிரி மருத்துவரின் பரிந்துரை சீட்டு எதுவும் வைத்திருந்தாரா என்பது தொடர்பாக நான் எதுவும் விசாரிக்கவில்லை என்றால் எதிரி போலி மருத்துவர் என்பதால் அது தொடர்பாக நாங்கள் விசாரிக்கவில்லை. கைப்பற்றப்பட்டதாக கூறும் மருந்துகள் சாதாரணமாக மெடிக்கல் கடைகளில் கிடைக்கும் என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட மருந்துகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டதா என்றால் அது ஆய்வாளரின் வேலையாகும், எனக்கு தெரியாது. மருந்தை கைப்பற்றிய இடத்தில் வைத்து மருத்துவர் அதை ஆய்வுக்கு உட்படுத்தினாரா என்றால் ஞாபகம் இல்லை.

14. எதிரியின் வீட்டிற்கு வெளியே மருத்துவமனைக்கான போர்டு எதுவும் வைக்கப்படவில்லை என்றால் சரிதான். எதிரி ஆங்கில மருத்துவம் பார்த்தார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் அவரிடமிருந்து ஊசி மருந்துகள் கைப்பற்றப்பட்டுள்ளதால் அவர் ஆங்கில மருத்துவம் பார்த்தார் என்பது நேரடியாக தெரியும். எதிரி மருத்துவம் பார்ப்பதாக தனி நபர்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் மருத்துவருக்கு யாரோ தகவல் கொடுத்துள்ளார்கள், புகார் கொடுக்கவில்லை. அது தொடர்பாக விசாரணை எதுவும் செய்யப்படவில்லை என்றால் ரகசிய தகவல் தொடர்பாக விசாரணை செய்வதில்லை. யாரும் புகார் கொடுக்கவில்லை என்றாலும், ரகசிய தகவல் என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.

15. எதிரியின் வீட்டில் எவ்வளவு நேரம் ஆய்வு செய்தோம் என்றால் சுமார் 45 நிமிடங்கள் ஆய்வு செய்தோம். கைப்பற்றப்பட்டதாக கூறும் பொருட்கள் எதிரியின் வீட்டில் உள்ள எந்த அறையில் இருந்தது என்றால் ஞாபகம் இல்லை. 45 நிமிடங்கள் எதிரியின் வீட்டில் ஆய்வு செய்ததாக ஆய்வாளர் என்னை விசாரித்த போதும், என்னுடைய முதல் விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரிதான். அந்த 45 நிமிடத்தில் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்து விட்டார் என்றால் இல்லை. அந்த 45 நிமிடத்தில் எங்களுடைய காவல் ஆய்வாளருக்கு எதிரியின் வீட்டில் ஆய்வு செய்வது தொடர்பாக தகவல் கூறினேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

16. எத்தனை மணிக்கு எதிரியை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றோம் என்றால் 12.00 மணிக்கு அழைத்து சென்றோம். எதிரி காவல் நிலையத்தில் இருந்தபோது மருத்துவர் பழனியப்பாவின் உயர் அதிகாரிகள் காவல் நிலையத்திற்கு வந்து எதிரியிடம் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. மருத்துவர் பழனியப்பா வழக்கு சம்பந்தமாக அவருடைய உயர் அதிகாரிகளுக்கு தகவல் கூறினாரா என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கூறுவது போல் எதிரியிடமிருந்து எவ்விதமான பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், புள்ளிவிபர கணக்கிற்காக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு பதிவு செய்யப்பட்ட காலத்தில் டெங்கு காய்ச்சல் அதிகமாக இருந்ததால் புள்ளிவிபரத்திற்காக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

13 Mar 2026 17:18

Judicial Magistrate 2, Sattur.